செ.வெ.எண்: 868 நாள்: 28.12.2019

**வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையங்களில் 24 மணி நேர துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு.**

**மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையங்களில் 24 மணி நேர துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் முதற்கட்ட ஊரக உள்ளாட்சி தேர்தலுக்கான வாக்குப்பதிவு 27.12.2019 அன்று நடைபெற்றது. அந்த வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் முதற்கட்டமாக அன்னவாசல், குன்றாண்டார்கோவில், புதுக்கோட்டை, விராலிமலை, கந்தர்வக்கோட்டை மற்றும் கறம்பக்குடி ஆகிய 6 ஊராட்சி ஒன்றியங்களில் 80.69 சதவீதம் வாக்குப்பதிவு நடைபெற்றுள்ளது.

வாக்குப்பதிவு மையங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட வாக்குப்பெட்டிகள் ஏற்கனவே வரையறுக்கப்பட்ட 14 வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையங்களில் 24 மணி நேரமும் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு தொடர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளது.

ஊரக உள்ளாட்சித் தேர்தலின் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு 30.12.2019 அன்று நடைபெற உள்ளது. இதனை தொடர்ந்து 2.1.2020 அன்று வாக்கு எண்ணும் பணியானது நடைபெற உள்ளது. இதற்கு தேவையான அனைத்து

ஏற்பாடுகளும் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**